வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3116/ஆ1 /2023 நாள். 17.10.2023

பொருள்: பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களில் தமிழ் வழியில் பயின்று தேர்ச்சி பெற்ற சிறந்த மாணவர்களுக்கு – பெருந்தலைவர் காமராஜர் விருது வழங்கி மாணவர்களின் கல்வி மற்றும் தனித்திறன்களை ஊக்குவிக்கும் பொருட்டு பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ / மாணவியர் பெயர் பட்டியல் அனுப்பக் கோருதல் – சார்பு

பார்வை: 1.சென்னை.6 பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.21908/கே/இ3/2023 நாள்.13.07.2023

-----

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை ஆணைக்கிணங்க 2022 – 2023 ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களில் தமிழ் வழியில் பயின்று தேர்ச்சிபெற்ற சிறந்த மாணவர்களுக்கான பெருந்தலைவர் காமராஜர் விருது வழங்கி மாணவர்களின் கல்வி மற்றும் தனித்திறன்களை ஊக்குவிக்கும் பொருட்டு பள்ளியில் தமிழ் வழியில் பயின்று 60 சதவிகிதம் தேர்ச்சிபெற்று மற்றும் கலை இலக்கியம்,விளையாட்டு, அறிவியல் மற்றும் கண்காட்சிகள் மற்றும் இணைசெயல்பாடுகள் உள்ளிட்ட தனித்திறன்கள் அடிப்படையில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் பெயர் பட்டியலினை (குறைந்தது ஒரு பள்ளிக்கு 2 மாணவர்கள் வீதம்) இணைப்பிலுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 27.10.2023க்குள் பிரிவு எழுத்தரிடம் நேரில் சமர்ப்பிக்குமாறு அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு. படிவம் 1 மற்றும் 2

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்,
அரசு /அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.
மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அவர்களுக்கு தொடர்நடவடிகையின் பொருட்டு

Scanned with CamScanner